பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி

மலர்: 15] சென்னை: வைகாசி 24 (6—6—68) வியாழன் ★ வெளியூர்: வைகாசி 25 வெள்ளி (7—6—68) [இதழ்: 296

மாநகராட்சித் தேர்தல்

அமைச்சர் முத்துசாமி அறிவிப்பு

★

சென்னை, சூன் 6—

"சென்னை மாநகராட்சித் தேர்தல்கள் செப்டம்பர் திங்கள் மூன்றாவது வாரம் அல்லது நான்காவது வாரத்தில் நடத்தப் படலாம்; தேதி இன்னும் இறுதியாக முடிவு செய்யப்படவில்லை; கூடிய விரைவில் தேதியும் நிர்ணயிக்கப்பட்டு அறிவிக்கப்படும்"

என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி, நிருபர்களிடம் கூறினார்.

அதிர்ச்சியுற்ற அமெரிக்கமக்களின் வேதனைக் குரல்கள்!

நாட்டுக்கே அவமானம் என மனக் குமுறல்

அரசியலே குழப்பநிலையில் ஆழ்ந்தது

வாஷிங்டன், சூன் 6—

செனட்டர் இராபர்ட் கென்னடி சுடப்பட்ட செய்தி காட்டுத் தீ போல் பரவி நாட்டுமக்கள் அனைவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. கடந்த நாலரை ஆண்டுக் காலத்தில் அமெரிக்காவின் மூன்று பெரும் சான்றோர்கள் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாகியிருப்பதை எண்ணி அவர்கள் கலங்கினர்.

1963 நவம்பரில் இராபர்ட் கென்னடியின் மூத்த சகோதரரான குடியரசுத் தலைவர் ஜான் எப். கென்னடி கொல்லப்பட்டார்.

இரண்டு மாதங்களுக்கு முன்புதான் நீக்ரோவர் தலைவரான மார்ட்டின் லூதர் கிங் சுடப்பட்டு மாண்டார்.

இப்போது இராபர்ட் கென்னடியும் சுடப்பட்டிருக்கிறார்.

இந்தத் துயரச் சம்பவங்களெல்லாம் அமெரிக்க மக்களின் மனத்தில் மிகவும் வேதனையைக் கொடுத்திருக்கிறது.

"அரசியல் படுகொலைகள் அமெரிக்காவில் மிகச் சாதாரண சம்பவங்களாகிவிட்டனவே! அட கடவுளே!" என்று, நற்பண்புடைய அமெரிக்க மக்கள் தங்கள் வேதனையை வெளியிட்டுக்கொண்டனர்.

"இது மிகவும் வெட்கக்கேடான செயல்; இந்த நாடு இத்தோடு ஒழிந்துவிட்டது; லத்தீன் அமெரிக்காவைவிட மோசமாகிவிட்டன அமெரிக்க ஐக்கிய நாடுகள்" என்று பலரும் பேசிக்கொள்கின்றனர்.

சுடப்படுவதற்கு முன் இராபர்ட் கென்னடி மிகவும் உணர்ச்சி வயப்பட்டிருந்தார்; தமது ஆதரவாளர்களைப் பார்த்து, 'நாம் இப்போது சிகாக்கோவுக்குச் செல்லவிருக்கிறோம்; அங்கும் வெற்றி பெறுவோம்' என்று கூறினார்.

ஆனால் இப்போது அரசியல் சூழ்நிலையே குழப்பத்தில் ஆழ்த்தப்பட்டுவிட்டது!

லாஸ் ஏஞ்சல் நிகழ்ச்சி. 'அடுத்து என்ன நடக்குமோ' என்று ஒவ்வொருவரையும் அஞ்சவைத்திருக்கிறது!

'சதி நடந்ததாகச் [illegible] சான்று இல்[illegible]

வாஷி[illegible]

"சென[illegible]

[illegible]

[illegible] சம்பவம், ஒரு தனி நபரின் செயல் என்பது சாட்சியங்களிலிருந்து தெரிகிறது"

என்று அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கடைசி செய்தி

கென்னடி மறைவு

பிழைக்க வைக்கும் முயற்சி பலனளிக்கவில்லை

துப்பாக்கியால் சுடப்பட்டுக் கவலைக்கிடமான நிலையில் இருந்த இராபர்ட் கென்னடி, உயிர் நீத்ததாகக் கடைசியாக வந்த செய்தி கூறுகிறது.

எப்படியாவது உயிர் பிழைக்கச் செய்துவிட வேண்டும் என்று மருத்துவ நிபுணர்கள் எவ்வளவோ பாடுபட்டும், பலனற்றுப் போய்விட்டது.

குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் — உறவினர்கள் அனைவரும் வந்துவிட்டனர்.

மருத்துவமனையில் செய்தியாளர்கள்கூட அனுமதிக்கப்படாத நிலையில், பாதுகாவல் பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

குருதி தோய்ந்த குடும்ப வரலாறு!

கால் நூற்றாண்டாகக் கென்னடி குடும்பம் சந்தித்த சோக நிகழ்ச்சிகள்!

நியூயார்க், சூன் 6—

நேற்று துப்பாக்கிக் குண்டுக்கு இலக்கான இராபர்ட் கென்னடி மட்டுமல்ல — அவரது குடும்பமே இத்தகைய சோகச் சம்பவங்கள் பலவற்றைச் சந்தித்ததுதான். அந்தக் [illegible] நூற்றாண்டு வரலாறே இரத்தக்கறை

[illegible] கனை [illegible] னியர் [illegible] ண்டதி [illegible] சோகச் சம்ப[illegible] ம்பத்தில் [illegible] பெற்று வந்

[illegible] படையில் பணியாற்[illegible] அவர், பிரெஞ்சுக் கடற்கரைப் பகுதியில் ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்கள்மீது வெற்றிகரமான தாக்குதலை நடத்திய பின், அவருடைய விமானம் தாக்கப்பட்டு, மாண்டார்.

1948 மே 3-ஆம் நாள், கென்னடியின் சகோதரியும் விதவையுமான ஹார்ட்டிங் சீமாட்டி, தென் பிரான்சில் ஒரு விமான விபத்துக்குள்ளாகி மாண்டார். அவருடைய கணவர், 1944-ல் பிரான்சில் கொல்லப்பட்டார்.

இன்னொரு சகோதரியான ரோஸ் மேரி, பிறவி முதலே மூளை வளர்ச்சி பெருதவராவார்.

இராபர்ட் எப். கென்னடியின் பெற்றோர்கள் ஜார்ஜ் ஸ்காரக் சேலும் அவர் மனைவியும், 1955-ல் ஒரு விமான விபத்தில் சிக்கி மாண்டனர்.

ஜோசப் பி. கென்னடி சீனியரின் உடல் நிலை, 1961-ல் பாதிக்கப்பட்டு இன்னும் உடல் தேருத நிலையிலேயே இருந்துவருகிறார்.

1963-ல், குடியரசுத் தலைவர் ஜான் எப். கென்னடிச்குப் பிறந்த குழந்தையான பாட்ரிக் கென்னடி, நுரையீரல் பாதிக்கப்பட்டு இறந்தது. அதே ஆண்டு மே 22-ம் நாள், ஜான் எப். கென்னடி, துப்பாக்கியால் சுடப்பட்டார்.

போர்க் காலத்தில் ஜான் கென்னடியின் படகு ஜப்பானியரால் தாக்கப்பட்ட போது, அவர், உயிர் பிழைத்ததே அரிதாகும். செனட்டராக இருந்தபோதும் அவர் முதுகில் காயமடைந்து—நிலைமை மோசமாகி — ஆபரேஷனுக்குப் பின் குணமானார்.

எல்லோருக்கும் இளையவரான செனட்டர் எம். கென்னடி, 1964 சூன் திங்களில் விமான விபத்தில் சிக்கி மரணவாயிலையே எட்டிவிட்டார்.

1966 செப்டம்பரில் இராபர்ட் கென்னடியின் மைத்துனரான ஜார்ஜ் ஸ்கெக்செலும் அவருடைய நெருங்கிய நண்பரான டீன் மார்க் என்பவரும் ஒரு விமான விபத்தில் சிக்கி மாண்டனர்.

★★★

கழகத்தேர்தல்கள்

பெருநகரக் கிளைத் தேர்தல் நாள் ஒத்திவைப்பு

வார்டுகள் வாரியாக உட்கிளை அமைந்து அதன் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பெருநகரக் கிளைத் தேர்தல்களுக்கான இடம் — நேரம் — ஆணையாளர் ஆகிய விவரங்கள் அந்தந்த மாவட்டச் செயலாளர்களால் ஏற்பாடு செய்து அறிவிக்கப்படாததாலும் ஏற்பாடு செய்து அவர்கள் தலைமைக் கழகத்திற்கு அறிவிக்கப் போதிய காலம் கொடுக்கவேண்டியிருப்பதாலும்,

சூன் 8, 9 ஆகிய நாட்களில்

நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த பெருநகரக் கிளைகளின் தேர்தல்கள்,

16—6—68-ம் நாளுக்கு

ஒத்திவைக்கப்படுகின்றன.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

★★★

கோவை தீ விபத்து

ஒரு நபர் கைது

கோவை, சூன் 6—

"ரங்கநாதபுரத்தில் நடந்த தீ விபத்தில் பாதிக்கப்பட்டோருக்குத் தமிழக அரசு பண உதவியாக ரூ. 70,000 வழங்கியது.

இந்த விபத்தில் சுமார் 98 குடும்பங்கள் வீடுகளை இழந்தனர்; ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ. 20 முதல் ரூ. 80-வரை தரப்பட்டது.

இந்த விபத்து சம்பந்தமாக ஒரு நபர் கைது செய்யப்பட்டுள்ளார்

எல்லா வேட்பாளர் குடும்பங்கட்கும் பாதுகாப்பு

அதிபர் ஜான்சன் ஆணை

குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவருக்கும், அவர்கள் குடும்பத்தாருக்கும் உடனே பாதுகாப்பு அளிக்க இரகசியப் போலீசாருக்குக் குடியரசுத் தலைவர் ஜான்சன் ஆணை பிறப்பித்தார்.

துப்பறியும் கூட்டமைப்பையும் (எப்.பி.ஐ) மற்ற போலீசு நிறுவனங்களையும் இதற்கு அழைத்துக் கொள்ளுமாறு இரகசியப் போலீசாரை ஜான்சன் கேட்டுக்கொண்டார்.

ஜான்சன் உத்தரவுக்கிணங்க எல்லா வேட்பாளர்களையும் அவர்களுடைய குடும்பத்தினரையும் ஆயுதம் தரித்த இரகசியப் போலீசார் காவல் புரிய ஆரம்பித்தனர்.

செனட்டர் கென்னடியின் 10 குழந்தைகளில் சில உள்ள வீட்டிலும் காவலாளிகள் காணப்பட்டனர்.

மேலும், ஆயிரக்கணக்கான படை வீரர்களும் ஆங்காங்கே பாதுகாப்புக்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

திருமலை, சூன் 6—

திருப்பதி ஏழுமலையானுக்கு மே மாதத்தில் மட்டும் உண்டியிலிருந்து ரூ. 25 இலட்சம் வருமானம் வந்துள்ளதாம்.

இது தவிர 38 மூட்டை பணத்தை எண்ண முடியாமல் கட்டி வைத்துள்ளார்களாம்.

நம்நாடு
ஆசிரியர்: இரா.செழியன்

திருவள்ளுவராண்டு 1999 வைகாசி 24 (6—6—68) வியாழன்

சுப்பிரமணியம்--காமராசர் ஓலம்!

அனைத்திந்திய காங்கிரசுக் குழுக் கூட்டம் புதுடில்லியில் நடைபெற்றிருக்கிறது. அக்கூட்டத்தில் கலந்துகொண்ட குழு உறுப்பினர்களில் பெருந்தொகையினர், காங்கிரசுக் கட்சியின் மேலிடத் தலைவர்களின்மீது குற்றஞ்சாட்டிக் கடுமையாகத் தாக்கிப் பேசியுள்ளனர்.

எஸ். என். மிஸ்ரா என்ற உறுப்பினர் கொண்டுவந்த தீர்மானத்துக்கு மாற்றுத் தீர்மானமாக—காங்கிரசு செயற்குழுவின் சார்பில்—தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சுப்பிரமணியம், தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்தார்.

அத்தீர்மானத்தை விளக்கிக்கூறி அவர் பேசுகையில், 'சனநாயக சோஷலிசத் திட்டங்களை தெளிவாகக் காங்கிரசு வரையறுக்க வேண்டும்' என்றும், 'சமூகக் குறிக்கோளைத் தகுந்தவாறு விளக்கக் காங்கிரசு தவறியதோடன்றி, அந்தக் குறிக்கோள நிறைவேற கொள்கைகளையும், திட்டங்களையும் வரையறுக்கவும் காங்கிரசு தவறிவிட்டது' என்றும், தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார். சுப்பிரமணியம் இவ்வாறு கூறியுள்ளதன் பொருள்தான் என்ன?

'காங்கிரசுக் கட்சி காண விரும்புவது, சனநாயக சோஷலிச சமுதாயமாகும்' என்று இதுவரையில், காலஞ்சென்ற பண்டித நேரு முதற்கொண்டு முன்னாள் காங்கிரசுத் தலைவராக இருந்த காமராசர் வரையில், நாள் தவருமல் கூறிவந்திருக்கின்றுர்கள்.

'சனநாயக சோஷலிசம்' என்ற சொல், கேட்பவர்கள் செவிடாகத்தக்க அளவுக்குக் காங்கிரசு மேடைகளிலிருந்து இப்பொழுதும் ஒலித்த வண்ணம் உள்ளன. ஆனுல், அந்தச் சொல்லுககுரிய பொருள்—அந்தச் சொல்லுக்குக் காங்கிரசு கொடுத்திருக்கின்ற பொருள் என்ன என்பதுபற்றி இன்றுவரையில் காங்கிரசுக் கட்சியிலுள்ளவர்களுக்கே தெரியவில்லை.

'சனநாயக சோஷலிசம்' என்ற சொல்லுக்கு, எப்பொருளைக் காங்கிரசுக் கட்சி கொண்டிருக்கிறது என்பது பற்றியும் 'தெளிவில்லை' என்று சுப்பிரமணியம் இப்பொழுது அறிவித்திருக்கின்றுர்

'சனநாயக சோஷலிசம் என்ற சொல்லுக்கு, தான் கொண்டுள்ள பொருளில் காங்கிரசுக் கட்சிக்கே தெளிவில்லாத காரணத்தினுல், அதை நிறைவேற்றுவதற்கான 'கொள்கைகளையும் திட்டங்களையும் வரையறுக்கவும் காங்கிரசு தவறிவிட்டது' என்ற உண்மையையும் சுப்பிரமணியம் ஒப்புக்கொண்டிருக்கின்றுர்.

தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சுப்பிரமணியம் அவர்களின் இக்கூற்றிலிருந்து—பொருள் தெரியாமலும், பொருளைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற கவலை இல்லாமலும் சமுதாயத்தின் கீழ்த்தட்டில் உள்ள பெருந்தொகையான மக்களை மயக்குவதற்கும், அவர்களை ஏமாற்றிக் காங்கிரசுக் கட்சிக்கு ஆதரவு திரட்டவுமே இன்றுவரையில் காங்கிரசுக் கட்சியானது, 'சனநாயக சோஷலிசம்' என்ற சொல்லை, திரும்பத் திரும்ப முழங்கி வந்திருக்கிறது என்பது உண்மையாகிறது. இதைத் தவிர, சுப்பிரமணியம் தந்துள்ள விளக்கத்திலிருந்து, 'சனநாயக சோஷலிசம்' என காங்கிரசுக் கட்சி இன்றுவரை பேசிவந்திருப்பதற்கு, வேறு முடிவுக்கு எவராலும் வரமுடியாது.

தான் இதுவரையில் கூறிவந்திருக்கின்ற 'சனநாயக சோஷலிசம்' என்ற சொல்லுக்கே தக்க விளக்கத்தைக் கொள்ளாமலும் கூருமலும் காங்கிரசுக் கட்சி காலங்கழித்துவந்திருக்கின்ற நிலையில், அந்தச் சொல்லுக்குத் தமிழகக் காங்கிரசு மேடைகளிலிருந்து ஆதரவை திரட்டிவந்த---திரட்டிவருகின்ற காமராசர், சுப்பிரமணியத்தின் கூற்றை ஏற்றுக்கொள்ளுவாரோ--ஏற்றுக்கொள்ளமாட்டாரோ! ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாமற்போனுலும், 'சனநாயக சோஷலிசம்' என்ற சொல்லைத்தான் இதுவரையில் காங்கிரசுக் கட்சி மீண்டும் மீண்டும் முணுமுணுத்து வந்திருக்கின்றதே அல்லாது, அச்சொல்லுக்குத் தான கொண்டிருக்கின்ற பொருள் என்னவென்பதை மேலெழுந்தவாரியாகக்கூட விளக்கிக கூறியது கிடையாது என்பதை, காமராசர்கூட மறுக்கமாட்டார் என்பது உறுதி.

தான் கூறிவருகின்ற 'சனநாயக சோஷலிசம்' என்ன என்பதை வரையறுத்துக்கோள்ளக் காங்கிரசுக் கட்சி தவறிவிட்டிருக்கிறது—என்று சுப்பிரமணியம், ஒளிவுமறைவுக்கு இடமில்லாமல் அறிவித்திருக்கின்றுர். ஆனுல், காமராசர் அவர்களோ, 'வசதியாக வாழ்கிறவர்கள் சோஷலிச சமுதாயம் ஏற்படுவதைத் தடுக்க முயற்சிப்பார்கள். சனநாயகத்தில் ஏழைகளின ஓட்டை (வாக்கு) விலை பொருளாக ஆக்கி வாங்க முயற்சிக்கிறுர்கள்--வாங்கிவிடுகிறுர்கள' என்று, ஓலமிட்டுக் கோண்டிருக்கின்றுர்.

'ஏழைகளின் வாக்குகளை விலை கொடுத்து வாங்கி, தேர்தலில் வெற்றி பெற்றுவிடுகின்றனர்' என்று—வாக்குகளை விலை கொடுத்து வாங்குவதைத் தமிழகத்தில் அரசியல் தொத்து நோயாக்கி, அதைப் பரவலாக்கி, உண்மையான சனநாயகத்துக்கு உலை வைத்து வந்திருக்கின்ற—காமராசர் அவர்களா கூறுவது?

விருதுநகர் தொகுதியில் தாம் வெற்றி பெற்ற நேரத்திலும் சரி—தோல்வியுற்ற நேரத்திலும் சரி—அவருக்காகத் தேர்தல் பணி புரிந்தவர்கள், ஏழைகளின் வாக்குகளை வாங்க எத்தனை இலட்சங்களைச் செலவழித்திருக்கின்றனர் என்ற உண்மை, காமராசருக்குத் தெரியாதா? இந்த உண்மை, இந்தச் 'சமதர்மச் சண்டமாருதத்'துக்குத் தெரியாதா?

அண்ணு உட்பட கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் பதினைந்து பேர்களையும் தேர்தலில் தோற்கடிக்க அவர், எவ்வளவு பணம தேர்தல் நிதியாகத் திரட்டினுர்—எவ்வளவு தொகையைக் காங்கிரசுக் கட்சி சார்பில் செலவிட்டார்—மேற்படி பதினைந்து தொகுதிகளிலும் காங்கிரசு வேட்பாளர்களாக நின்றவர்கள், வாச்குகளை விலைக்கு வாங்க த[...] பணத்தை வாரி இறைத்திருக்கின்றனர்—[...] 'அரசியல் கற்பு'டையார் அறியாரா?

ஏழைகளின் வாக்குகளை விலை கொடுத்[...] சுக்கு வெற்றி' எனப் பீத்திக்கொள்ளுகின்ற 'தே[...] விடுதி'யின் எசமானர், இந்த விருதுநகர் காமராசர்தானே[...]

ஏழைகளின் வாக்குகளை விலை கொடுத்து வாங்கி [...] தேடிக்கொள்ளுகின்ற 'தேர்தல் விபசார முறை'யை, அரியதோர் தேர்தல் நுண்கலையாகச் செம்மைப்படுத்தியுள்ள பெருமை—புகழ் முழுவதற்கும் இந்த விருதுநகர் 'விசித்திரச் சித்தர்'தானே சொந்தக்காரர்! இந்தத் 'தேர்தல் விபசார'த்துக்குக் காமராசர்தானே மொத்த வியாபாரி—ஏற்றுமதி வணிகர்!

—கா. க.

இயன்றதை செய்தோம்—இத்துடன் இருந்துவிடமாட்டோம்!

'நினைத்த அளவுக்குச் செய்ய நிதி வசதி இல்லையே' என்றுதான் கவலைப்படுகிறேம்'

'நிலைமை சீராகும்போது மேலும் பல செய்வோம்'---அரசு ஊழியர்கட்கு அண்ணு வழங்கும் நம்பிக்கை

சென்னை, சூன் 5—

"அரசுடன் நிரந்தரத் தொடர்பு கொண்ட ஊழியர்களின் உழைப்பு--திறமை ஆகியவற்றை நாங்கள் நன்கு உணர்ந்திருந்தாலும்--அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க ஆவல் கொண்டிருந்தாலும், நிதி நிலை காரணமாகச் செய்யவேண்டிய அளவுக்கு உதவி செய்ய இயலவில்லை.

"இன்றுள்ள சூழ்நிலையில், எந்த அளவுக்கு இயலுமோ அந்த அளவில் வசதிகளைச் செய்து தருகிறேம்; நிதி நிலைமை சீராகும்போது, மேலும் சில வசதிகளைச் செய்துதர உத்தேசித்திருக்கிறேம்"

என்று முதலமைச்சர் அண்ணு அவர்கள், நேற்று கோட்டையில் உள்ள தலைமைச் செயலக முத்தமிழ் மன்றம் அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் சுட்டிக்காட்டினுர்.

வெளிநாடு சென்று புகழுடன் திரும்பியதையொட்டி இவ்வரவேற்பு நடைபெற்றது

விழாவிற்கு, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. சி. ஏ. இராமகிருஷ்ணன் ஐ.சி.எஸ் தலைமை தாங்கினுர்.

இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் இறை வணக்கம் பாடியதுடன், அண்ணு அவர்களைப் பாராட்டித் தாமே இயற்றிய பாடல் ஒன்றினையும் பாடினுர்.

திரு. கோதண்டராமன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினுர்.

திரு. இராமதாஸ், வரவேற்பு இதழ் வாசித்தளித்தார்.

முத்தமிழ் மன்றச் செயலாளர் நன்றி நவின்றுர்.

வரவேற்புக்கு நன்றி தெரிவித்து முதலமைச்சர் அண்ணு அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:—

'இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கின்ற நாங்களானுலும்—இதற்குமுன்பு ஆட்சியில இருந்தவர்களானுலும் — இனி ஆட்சிப் பொறுப்பேற்க வருபவர்களானுலும் — எங்களுக்கெல்லாம இந்த அரசிடம் இருக்கின்ற தொடர்பைவிட உங்களுக்கு மிக நெருங்கிய—நேர்த்தியான—நிலைத்த தொடர்பு இருக்கின்றது என்பதை நீங்கள் உணர வேண்டும். அந்த வகையில் நீங்கள் இந்த அரசின் நீண்ட காலப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள்!

அரசு ஊழியர்களில் கடைநிலை ஊழியராக இருந்தாலும், உயர்நிலை அதிகாரிகளாக இருந்தாலும், அவர்கள் விரும்பினுல் பதவியைத் துறந்துவிட்டு—மக்கள் ஆதரவு பெற்று—தேர்தலில் நின்று அமைச்சராகக்கூட இங்கே வரலாம்; ஆனுல் நாங்கள், 'நமக்கேன் இந்தத் தொல்லை; அமைச்சர் பதவி வேண்டாம்; ஏதாவது ஓர் இலாகாவின் செயலாளராக இருந்தால் போதுமானது' என்று விரும்பினுல் [...] விருப்பம் நிறைவேருது.

உங்களுக்கு இந்த அரசிடம் நேர்த்தியான — நிரந்தரமான—தகுந்த பலனைத் தரக்கூடிய முறையில் நெருங்கிய தொடர்பு இருக்கிறது; ஆகவே, இந்த விழாவிற்கு அத்தகைய தொடர்பு உள்ள செயலாளர் தலைமை வகிப்பது பொருத்தமான ஒன்றுதான் என்பதில் யாருக்கும் சந்தேகம் ஏற்படத் தேவையில்லை.

நான் இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்குமுன்பே உங்களிடத்தில் எனக்கு மிகுந்த மதிப்பும் மரியாதையும், பரிவும் பாசமும் இருந்துவந்திருக்கிறது. ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப்பிறகு உங்களது சடுமையான உழைப்பைப் பார்த்ததும் அந்த எண்ணம் மேலும் உறுதிப்பட்டது.

இவ்வளவு கடுமையாக உழைக்கும் உங்களில் பலருக்கு முத்தமிழ்மீது இத்தனைப் பற்று ஏற்பட்டிருப்பது சிலருக்கு வியப்பாகக்கூட இருக்கலாம்.

இது எதைக் காட்டுகிறது? எந்த நிலையில் தமிழ் மக்கள் இருந்தாலும், அவர்களையும் மீறித் தமிழ் உணர்வும், தமிழ்ப் பற்றும் மிகுந்திருப்பதைப் பார்க்க முடிகிறது. இதைக் காணும் போது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி ஏற்படுகிறது.

அண்மையில் உங்களுக்கு அளிக்கப்பட்ட ஊதிய உயர்வுக்காக நன்றி கூறினீர்கள். இன்னும் உங்களுக்கு அதிகமாகச் செய்ய வேண்டும் என்ற ஆவல் இருக்கிறது; ஆனுல் நிதிநிலை சரியாக இல்லை என்பதையும் நீங்களே நன்குணருவீர்கள்.

இன்னும் உங்களுக்கு செய்யப்பட வேண்டிய சலுகைகள்--நீக்கப்படவேண்டிய குறைபாடுகள்--தரப்பட வேண்டிய வசதிகள் நிரம்ப இருக்கின்றன; ஆனுல் இன்றைய சூழ்நிலை உங்களுக்கே தெரிந்திருக்கும்.

நமது நிதி நிலைகள் உறுதிப்பட்டு நலல சூழ்நிலை ஏற்படுமானுல் பல சலுகைகளை அளிககவேண்டும் எனபதில் மிகுந்த விருப்பம் கொண்டிருக்கிறேன் என்பதை மட்டும் சொல்லிக்கொள்கிறேன்."

எங்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட்டது

அரசு ஊழியர்கள் பெருமிதம்

திரு. [...] லமைச்[...] வேற்றுப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"முதலமைச்சர் அண்ணு அவர்களுக்கு அளிக்கப்படும் இந்த வரவேற்பு, இன்று நேற்று ஏற்பட்ட ஆசையின் காரணமாகத் தரப்படுவதல்ல; நீண்ட நெடுங்காலமாக அண்ணு அவர்களின் ஆழ்ந்த புலமையும், சான்றுண்மைமிக்க அறிவாற்றலும் நாட்டுக்குப் பயன்படவேண்டும் என்பதற்காக, 'ஆட்சித் தலைமையை அவர் ஏற்கவேண்டும்' என்று நாங்கள் கனவு கண்டு கொண்டிருந்தோம்; 'அவரது அறிவாற்றல் கண்டு அவனியெல்லாம் பாராட்டவும், அவரது தலைமைக்காக நாடு முழுதும் ஏங்கி நிற்கவுமான நல்ல காலம் பிறக்கவேண்டும்' என்று கற்பனைச் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தோம்!

அந்தச் கனவு பலித்ததன் அடையாளமாக—அந்தக் கற்பனை இன்றைக்கு நடைமுறையில் எண்ணியபடியெல்லாம் நடப்பதன் அறிகுறியாக—அதனுல் எங்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற அளவுகடந்த மகிழ்ச்சி காரணமாக இந்த வரவேற்பினை அளிக்கின்றேம்.

அவர் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான், எங்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட்டது.

தலைமைச் செயலகத்தில் இதற்கு முன்பெல்லாம் நாங்கள் உப்பு நீரைசதான் சுவைத்துக்கொண்டிருந்தோம்; அண்ணு அவர்களிடம் எங்கள் குறைகளைக் கூறியபின்னர்தான், இனிய செங்குன்றத்துத் தண்ணீரை நாங்கள் இன்றைக்குப் பருகிக் கொண்டிருக்கிறேம்!

ஒரே கூட்டமைப்பில் உள்ள எங்களைப் போன்ற ஊழியர்களுக்குள் (ஊதியத்தில்) உள்ள வேறுபாட்டைப் பலமுறை எடுத்துக்காட்டி வற்புறுத்தி வந்திருக்கிறேம்; ஆனுல் அண்ணு அவர்களின் காலத்தில்தான் அந்தக் குறைகள் நீங்கத் தொடங்கியிருக்கின்றன!

அண்மையில் அண்ணு அவர்கள் எங்கள்மீது கருணை கூர்ந்து அளித்த அகவிலைப் படி உயர்வுக்கும், மற்ற குறைகளை நீக்கி எங்களை ஆதரித்து வந்ததற்கும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேம்.

மூவேந்தர் காலத்தில் முடியுடை தமிழ்வேந்தர்கள் வீரத்தை நிலைநாட்டி கங்கையையும், கடாரத்தையும், இமயத்தையும், கலிங்கத்தையும் புறங்கண்டு வெற்றிக் கொடி நாட்டியிருக்கிறுர்கள்.

அறிஞர் அண்ணு அவர்களோ, தமது அறிவார்ந்த புலமையை நிலைநாட்டி, அமெரிக்கா முதலாக அகிலம் முழுவதும் புகழை நாட்டி வந்திருக்கிறுர்கள்; அவரை வரவேற்றுப் பாராட்டுவதில் தலைமைச் செயலக ஊழியர்களாகிய நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறேம்---வரவேற்கிறேம்."

பிரச்சினைகளைத் தீர்ப்பதில் வல்லவர் அண்ணு

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் சி. ஏ இராமகிருஷ்ணன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"அரசு ஊழியர்கள் எந்தவகைப் பகை இன்றியும், கருத்து வேற்றுமை இன்றியும் பணியாற்றி வருகிறுர்கள்.

அமைதியாக இருந்து எதையும் ஆழ்ந்து கவனித்துப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் வல்லவரான நமது முதலமைச்சரைத் தலை[...] செயலக ஊழியர்கள் [...]—அரசு ஊழியர்கள் [...] பாராட்டுகின்ற[...]கின்றனர்."

[...]

[...]தைச்[...] 'இரத்தின[...] டிரேடர்ஸ் நிறுவனத்திற்கும்—அதன் [...] கப் பார்ட்னர் என். தியாகரா[...]னுக்கும் தலா ரூ. 2000 அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது.

(3-ம் பக்கம் பார்க்க)

வளமிருந்தும் வாழ்வு சிறக்காததேன்?

மனித உழைப்பையும் இயற்கை வசதியையும் பயன்படுத்திக்கொள்ளத் தவறினர்

நிச்சயபுத்தியும் நிர்ணய மனப்பான்மையும் கொண்டு செயல்படவில்லை

காங்கிரசு ஆட்சியாளரின் கடந்தகால நடவடிக்கைகள்-- முன்னாள் ரிசர்வ் பாங்கி கவர்னரின் இடித்துரை

" இந்த நாட்டிலுள்ள 'மனித இயற்கை வசதி' ஆகியவை, முழுவதுமாகப் பயன்பட வேண்டுமானால், நமது மனப்பான்மையில் பெரிய மாறுதல் ஏற்பட வேண்டும்.

" அரசியல்வாதியும், அதிகாரவர்க்கத்தினரும், வர்த்தகத் துறையிலுள்ளவர்களும் தமது நெஞ்சத்தைத் தொட்டுப் பார்த்து, 'இதய சோதனை' செய்து பார்க்கவேண்டும். இத்துறையில், முதலாவதாக அரசியல்வாதிகளைக் குறிப்பிடுவதற்குக் காரணம் உண்டு; என்னவென்றால், அதிகாரபீடத்தை இயக்குகிறவர்கள் அவர்களே! அவர்கள் தமது இதயத்தைச் சோதித்துப் பார்த்துத் தம்மிடமுள்ள கோளாறுகளை நீக்கி, 'ஒழுக்கம்' ஒன்றை ஏற்படுத்திக்கொள்வார்களாயின்—'உள்ளொன்று புறமொன்று' என்றில்லாமல், ஒரு கொள்கையை அறிவித்து அதில் நிச்சயபுத்தியுடனும் நிர்ணய மனப்பான்மையுடனும் செயல்படுவார்களாயின் இந்த நாட்டின் மனிதத் திறன் -- இயற்கை வளம் இரண்டையும் கொண்டு, இந்த நாட்டில் சுபீட்சம் ஏற்படும்படி செய்யமுடியும்! வளம் இருக்கிறது— அதைப் பயன்படுத்துவதில்தான் கோளாறு!"

இவ்வாறு, முன்னாள் ரிசர்வ் பாங்கி கவர்னர் திரு. எச். வி. ஆர். ஐயங்கார் அவர்கள், 'திட்டத்தில் உள்ள கோளாறு என்ன? 1947-ல் கண்ட கனவு ஏன் மெய்யாகவில்லை?' என்ற தலைப்பில், 'தினமணி' இதழில் எழுதியுள்ள கட்டுரையில் கருத்தறிவித்துள்ளார். அக்கட்டுரையில் மேலும் அவர் கூறியிருப்பதாவது :—

"இந்தியாவிலுள்ள மனித பலம் (தொழிலாளர்கள், நிர்வாகிகள், எஞ்சினியர்கள் உட்பட) திறமை சம்பந்தப்பட்ட மட்டில் நாம் அதைரியப்பட எதுவுமில்லை. நல்ல மூளைசாலிகள் — எதையும் கற்றுக்கொள்ளக்கூடிய புத்திசாலித்தனமுள்ள உழைப்பாளிகளுக்குப் பஞ்சமில்லை; ஆனால், 'அது மட்டும் போதாது' என்பது அண்மை ஆண்டுகளில் ருசுவாகிவிட்டது.

நிச்சயபுத்தியுள்ள ஒரு நிர்வாகம் — நிர்வாகக் கொள்கைகளிடையே இணக்கம்—நிர்வாகக் கொள்கையில் உறுதிப்பாடு— தொழில் வளர்ச்சியின் தேவைகள் பற்றிய 'உணர்வு' உள்ள அதிகாரவர்க்கம் — ஆகியவை இன்றியமையாதவை. இந்த அம்சத்தில் நம்மிடம் முக்கியமான குறைபாடு காணப்படுகிறது.

அரசு இயந்திரம், எப்போது— எவ்வாறு செயல்படும் என்று நிச்சயமாக நம்புவதற்கில்லாத ஒரு நிலைமை இங்கு இருக்கிறது

'கொள்கை' இன்னது என்று பல சமயங்களில் தெரிவதில்லை; அந்தக் கொள்கை சரியானதுதான் என்பது பற்றியும் தெளிவு இல்லை; கொள்கைப்படி காரியம் உறுதியுடன் நடைபெறுமா என்பதும் நிச்சயமில்லை

உதாரணமாக, தனியார் துறையை எடுத்துக்கொள்வோம்; பொருளாதாரத்தின் முக்கியமான 'சிகரங்களை'த்தவிர மற்றவற்றில் தனியார் துறைக்கு ஊக்கமளிக்க வேண்டியதே என்பதுதான் அரசின் கொள்கை. ஆனால், பல அமைச்சர்கள் இடைவிடாமல் தனியார் துறையை இகழ்ந்து பேசிக்கொண்டே இருக்கிறார்கள்!

'தனியார் துறை' தொந்தி பருத்து—[illegible] துக்கொண்டு [illegible] வத்து [illegible]

[illegible] பீடங்களையும் வெட்ட[illegible] வேண்டியவர்கள் இல்லையா ?

இம்மாதிரி அக்கிரமக்காரர்கள் இருந்தால் அவர்களை மட்டும் வைக்க வேண்டிய இடத்தில் வைத்துப் பார்க்க வேண்டுமேயொழிய, உண்மையை மிகைப்படுத்தித் தனியார் துறை முழுவதையுமே ஒட்டுமொத்தமாக இகழ்வது என்பது பொருந்தாது.

இந்த மனப்பான்மையானது சரியான கொள்கையை உருவாக்குவதே சாத்தியமில்லாதபடி பாழ்படுத்துகிறது!

அடுத்தபடியாக நிர்வாக இயந்திரத்தைப் பார்த்தாலோ கேட்க வேண்டியதே இல்லை!

இந்தியர்கள் மனித உணர்ச்சி உள்ளவர்கள் என்றும், அன்பு — பரிவு — தாராளத் தன்மை முதலியவை இந்திய மனப்பான்மையின் அடிப்படை—யென்றும் சொல்வதும் வழக்கம். அலட்சியப் புத்தியாலோ, வேண்டுமென்றோ எந்த மனிதனுக்கும் தீமை விளையக்கூடாது என்று கருதுவது இந்தியப் பண்பாடு; ஆனால், நமது அதிகார வர்க்கத்தில் அந்த அலட்சியப் புத்தியே (யார் எப்படிப் போனாலென்ன என்ற மனப்பான்மையே) நெடுங்காலமாகக் காணப்பட்டு வருகிறது.

சுதந்திரம் வந்த பிறகும், 'மக்களுக்கு ஜவாப்தாரியான அரசு அமைந்த பிறகும் இந்த மனப்பான்மையில் பெரிய மாறுதல் எதுவும் ஏற்பட்டுவிடவில்லை!

அமைச்சர்கள் ஒருவிதமாகவும், அதிகாரவர்க்கத்தினர் வேறு விதமாகவும் மாறுபட்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றியல்ல நான் இங்கு குறிப்பிடுவது.

அலட்சியப் புத்தி சம்பந்தப்பட்ட மட்டில், இருவகையினரும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறார் [illegible] என்[illegible] வேண்டி [illegible]

[illegible] மல்ல [illegible] யின், [illegible] பதில் [illegible] தாம [illegible] தான் கார [illegible] இருக்கமுடி [illegible] க்குப் புரிய

[illegible] தாவின் கையில் ஒரு [illegible] (மனு-அதன்மீது கருத்து முதலிய அடங்கிய காகிதக் கட்டு) வந்தால் அது ஏதோ சில 'மனித ஜந்து'க்களின் வாழ்க்கையைப் பாதிக்கக்கூடிய விஷயம் என்ற நினைப்பே அந்தக் குமாஸ்தாவுக்கோ (அதிகாரிக்கோ) ஏற்படுவதில்லை; அது ஒரு கடுதாசி என்றுதான் மனதில் படுகிறது!

'அந்தக் கடுதாசி தாமதமானால் என்ன கெட்டுப்போயிற்று? கிடக்கட்டுமே -- சாவகாசமாகப் பார்ப்போமே' என்ற மனப்பான்மையில்தான் காரியம் நடக்கிறது!

ஒரு சில குமாஸ்தாக்கள், அதிகாரிகள் நான் கூறுவதற்கு விதிவிலக்காக இருக்கலாம்; ஆனால் துரதிருஷ்டவசமாகப் பெரும்பான்மையானவர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் நிலைமை இதுதான்!

சில 'பைல்'கள், மாதக் கணக்கில் யாரும் கவனிப்பாரற்று உறங்குகின்றன!

தமது தீர்ப்புக்கு சமர்ப்பிக்கப்படும் பிரச்சினைகளுக்கு விரைவாக முடிவு தெரிவிப்பது தமது அடிப்படை வேலைகளில் ஒன்று என்ற உணர்ச்சியே பல அமைச்சர்களிடம் இருப்பதில்லை!

உண்மையில், 'பைல்' என்பது என்ன? ஒவ்வொரு 'பைலும்' நேர்முகமாகவோ, அல்லது பிற நிகழ்ச்சிகள் மூலமோ ஏதோ ஒருவனது வயிற்றுப் பசியை நிவர்த்திப்பது அல்லது பசியை நீடிப்பதாக இருக்கும்.

'பைல்' தாமதமின்றி முடிவு செய்யப்படுவது, ஒருவாறு வயிற்றில் கஞ்சி ஊற்றுவதாக இருக்கும். இதைக் காலாகாலத்தில் செய்யாதிருப்பது மனித தர்மமாகுமா?

தாமதத்தால் விளையும் மற்றக் கேடுகளைப்பற்றி அதிகம் சொல்லவேண்டியதில்லை!

வெளிநாட்டு இறக்குமதிக்கான லைசென்சு தாமதப்பட்டால், இறக்குமதி செய்யும் பொருளின் விலை அகற்றுள்ளாக அதிகரித்துவிடுகிறது. தயாரிக்கும் பொருளின் உற்பத்திச் செலவு அதிகமாகி விலை உயருகிறது. இப்படி எத்தனையோ விபரீத விளைவுகள்!

தாமதம் என்பது சர்வசகஜமாக ஆகிவருகிறது!"

தீவிபத்தால்

பாதிக்கப்பட்டோருக்கு உதவி

அன்பில் தர்மலிங்கம்-- பராங்குசம் ஏற்பாடு

திருச்சி, ஜுன் 4—

திருச்சி காந்தி மார்க்கெட்டில் அண்மையில் தீவிபத்துக்காளான கடைகளை இன்று திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர் திரு. அன்பில் தர்மலிங்கமும், சட்டமன்ற மேலவை உறுப்பினர் திரு. பராங்குசமும் பார்வையிட்டனர்; தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட வியாபாரிகளுக்கு ஆறுதல் கூறினர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க ஏற்பாடு செய்வதற்கான முயற்சிகளில் திரு. தர்மலிங்கமும், பராங்குசமும் ஈடுபட்டுள்ளனர்.

வழிகாட்டிய ஒளி விளக்கு மறைந்தது!

கனக்டிகட், ஜுன் 5—

பிறக்கும்போது அவர் சாதாரணக் குழந்தையாகவேதான் பிறந்தார். அலபாமா மாநிலத்தில் டஸ்கம்பியா என்ற ஊரில் 1880-ம் ஆண்டு ஜுன் 27-ம் நாள் பிறந்தார் ஹெலன் கெல்லர். 19 மாதக் குழந்தையாக இருக்கையில் நோய்வாய்ப்பட்டு அதன் காரணமாகக் கண் பார்வை இழந்தார்; செவிப் புலனையுமிழந்தார். அப்பொழுது அவருக்குத் தெரிந்ததெல்லாம் ஒரு சில மழலைச் சொற்கள்தாம்.

திருமதி கெல்லர் தைரியத்துக்கும் விடாமுயற்சிக்கும் உறைவிடமாக இருந்தார் என்றால் அது மிகையல்ல!

சென்ற இரண்டாண்டுக்காலமாக அவர் நோய்ப்பட்டு படுத்த படுக்கையாகக் கிடந்தார். சென்ற வாரம் மாரடைப்பு கண்டது; 88-வது பிறந்த நாளுக்கு இன்னும் சில வாரங்கள் இருக்கையிலே, இத்திங்கள் முதல் தேதி சனியன்று இயற்கையெய்தினார்

தமக்கு ஏற்பட்ட ஊனங்களை எப்படியாவது வென்றுவிடுவது என்று உறுதியாக நின்று உழைத்து வெற்றி கண்டவர் கெல்லர். உலக மக்கள் அனைவருடைய பாராட்டுதலையும் பெற்றவர் அவர். எல்லா நாட்டுக் குருடர்களின் சார்பில் அவர் எல்லா உலக நாடுகளுக்கும் சென்றிருக்கிறார்.

சர்க்கரை ஆலைகளுடன் தமிழக அரசின் புதிய ஒப்பந்தம்

அமைச்சர் மதியழகன் தகவல்

சென்னை, ஜுன் 6—

தென்னிந்திய சர்க்கரை ஆலைகள் சங்கத்துடன் தமிழக அரசு புதிதாக மூன்று மாத ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறது; இதன்படி, வெளி மார்க்கெட் சர்க்கரையில் சுமார் 25-சதவிகிதத்தை (கிட்டத்தட்ட 2 000 டன்) குவிண்டால் ரூ 325-க்கு அரசுக்குக் கொடுக்க ஆலைகள் ஒப்புக்கொண்டிருக்கின்றன. இந்த மூன்று மாத ஏற்பாடு மே 23-ஆம் நாளிலிருந்து கணக்கிட்டு அமுலுக்கு வருகிறது.

"ஓட்டல்கள் போன்று மொத்த மாகச் சர்க்கரை பயன்படுத்துபவர்களின் தேவைகளைச் சமாளிப்பதற்காக இந்த ஏற்பாடு செய்து கொள்ளப்பட்டிருக்கிறது" என்று உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் கூறினார்.

சென்ற ஏப்ரலில் இந்திய அரசு விலைகள் குறையும்படிச் செய்வதற்காகத் தமிழகத்துக்கு 9,000 டன் வெளிமார்க்கெட்டு சர்க்கரையைத் தனி ஒதுக்கீடாக ஒதுக்கியது.

இப்போது தமிழகத்தில் 1,100 டன் வெளிமார்க்கெட் சர்க்கரை இருக்கிறது. இப்போது இருப்பில் உள்ள சரக்குக் குறைந்த விலையான ரூ 325-க்கு மாதா மாதம் கிடைக்கும்; 2,000 டன்கள் இவற்றைக் கொண்டு மொத்த தேவையாளர்களின் தேவைகளை நிறைவு செய்துவிட முடியும் என்று அரசு நம்புகிறது.

தென்னிந்திய சர்க்கரை ஆலைகள் சங்கத்துடன் முன்பு செய்துகொண்ட ஒப்பந்தம் மே 23-ஆம் நாள் காலவதியாயிற்று அந்த ஒப்பந்தப்படி வெளி மார்க்கெட் சர்க்கரையைக் குவிண்டால் ரூ. 350-க்கு அரசு வாங்கிவந்தது. இப்போது வெளிமார்க்கெட் சர்க்கரையில் 25-சதவிகிதத்தைக் குவிண்டால் ரூ 325-வீதம் அரசு வாங்கிக்கொள்ளும் பாக்கியுள்ள 75-சதவிகிதம் வெளி மார்க்கெட் சரக்கரையை ஆலைகள் தங்களுக்கு விருப்பமான விலையில் விற்கலாம்.

தற்போதைக்கு ரேஷனில் கிடைக்கும் சர்க்கரை அளவு அதிகரிக்கப்படமாட்டாது.

உணவுத் தட்டுப்பாடு ஏற்படாது

அமைச்சர் கே.ஏ.மதியழகன் பெருமித அறிவிப்பு

சென்னை, ஜுன் 25—

"இப்போது அரசிடம் இருப்பில் உள்ள அரிசியை வைத்துக்கொண்டு அக்டோபர் மாதம்வரை ரேஷன் பொறுப்புகளை நிறைவேற்றிவைக்க முடியும்" என்று உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார்.

சம்பா அரிசி ஐந்து இலட்சப் டன் கொள்முதல் செய்வதென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது; இந்த இலக்கு பெருமளவில் நிறைவெய்திவிட்டது.

மே 31-ந் தேதிவரை 4,70,000 டன் கொள்முதலாகியிருக்கிறது; இது 57 கிலோக்கள் கொண்ட 99 இலட்சம் முட்டைகள் நெல்லுக்குச் சமமாகும்.

டி. கே. சண்முகத்துக்கு பாராட்டு விழா

அமைச்சர் மு. கருணாநிதி பொன்னாடை போர்த்தினார்

ம. பொ. சி.—எம். ஜி. ஆர். வாழ்த்துரை

ஔவை டி. கே. சண்முகம் அவர்கள் மேலவை உறுப்பினராக நியமிக்கப்பட்டிருப்பதைப் பாராட்டும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழா, 4—6—68 மாலை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சபா அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

• தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்துப் பாராட்டிப் பேசினார்.

பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், ஔவை சண்முகத்துக்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டினார்

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ, மற்றும் திருவாளர்கள் எஸ். கே. பாலசுப்பிரமணியம், பட்சிராசகோபாலன், ம. கீ. கிருஷ்ணமூர்த்தி, வி. கே. குப்புசாமி, கொ. மொ. சனார்த்தனம், மாணவர் இரா. சனார்த்தனம், திருமதி சரோஜனி நாராயணசாமி ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

திரு. டி. கே. சண்முகம் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

பையில் அடங்கும் மோட்டார் சைக்கிள்!

பையில் மடக்கி வைத்துக் கொள்ளக்கூடிய புதுமையான மோட்டார் சைக்கிள், ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. 'மினிமோ' என்பது இதன் பெயர்.

மணிக்கு 25 கிலோ மீட்டர் வேகத்தில் ஓடக்கூடிய இம்மோட்டார் சைக்கிளின் எடை 50 இராத்தல்தான். 0·7 குதிரை சக்தியுள்ள எஞ்சின் பொருத்தப்பட்டிருக்கும்.

இம்மோட்டார் சைக்கிள் 80 சென்டிமீட்டர் நீளமும்-40 சென்டிமீட்டர் உயரமும் — 28 சென்டிமீட்டர் அகலமும் கொண்ட பிளாஸ்டிக் பையில் எளிதில் அடக்கிவிடலாம்.

இறக்குமதி விதிகளை மீறிய..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இறக்குமதி செய்த ஆர்ட் பட்டு நூலை விதிகளுக்குப் புறம்பாக விற்றதற்காக அவர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்; அபராதம் கட்டத் தவறினால் தியாகராசன், மூன்று மாதங்கள் கடுங்காவல் தண்டனை அனுபவிக்க வேண்டும்.

மற்றொரு வழக்கில் விதிகளை மீறி, இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களைப் பெரும் இலாபத்திற்கு விற்றதற்காக பெங்களூர் பேரஸ் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தின் பார்ட்டனர் எஸ். சரோஜாவுக்கும்—அதன் நிர்வாகி வி. சதாசிவத்திற்கும் (சரோஜாவின் கணவர்) ரூ 25,000 அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது.

தமிழக அரசின் கொள்முதல் திட்டம் வெற்றி

ஒத்துழைத்த விவசாயிகளுக்கு முதலமைச்சர் அண்ணு நன்றி

தாலுகாக்களிடை உணவுத் தானியப் போக்குவரத்துக் கட்டுப்பாடு நீங்கும்

சென்னை. சூன் 5—

தமிழக அரசின் கொள்முதல் திட்டம் வெற்றிபெற விவசாயப் பெருங்குடி மக்கள் பெருந்தன்மையுடனும், பொதுநல உணர்ச்சியுடனும் ஒத்துழைத்தமைக்காக அவர்களுக்கு முதலமைச்சர் அண்ணு அவர்கள் நன்றி தெரிவித்துள்ளார்கள்.

இதேபோல் இனியும், அரசின் கொள்முதல் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு நல்குமாறு விவசாயப் பெருமக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிருர்கள்.

இத்தொடர்பில் அண்ணு அவர்கள் விடுத்துள்ள அறிக்கையொன்றில், செங்கோட்டை, விளவன்கோடு தவிர தமிழகம் முழுவதிலும் தாலுகாக்களிடையே உணவுத் தானியப் போக்குவரத்துக்கு இருந்துவந்த தடை சூன் 15-ம் நாள்முதல் நீக்கப்பட்டுவிடும் என்றும் அறிவித்திருக்கிருர்கள். அறிக்கை வருமாறு: -

சம்பா அறுவடையில் 5 இலட்சம் டன் அரிசி கொள்முதலாக வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தோம்; ஏற்கனவே 4.7 இலட்சம் டன் கொள்முதலாகி விட்டது. மாநிலத்தின் சில பகுதிகளில் பருவ நிலை பாதகமாக இருந்திராவிட்டால் இன்னும் நன்ருகச் செய்திருக்க முடியும்.

அரசின் வேண்டுகோளுக்கு, இவ்வளவு சிறப்பாக செவிசாய்த்த தமிழக விவசாயிகளுக்கு நன்றி செலுத்த விரும்புகிறேன்.

பொது மக்கள் விநியோகத் திட்டத்தின்கீழ் பயனடையும் ஒன்றரை கோடி மக்களுக்கு மேல் சீராக உணவுத் தானியங்கள் கிடைக்கச் செய்யத் தங்களிடமுள்ள கையிருப்பை அரசினருக்கு வழங்க முற்போக்கான தமிழக விவசாயிகள் தாமாகவே முன்வந்து உதவியுள்ளனர்.

மக்களிடமிருந்து கிடைத்த பேராதரவின் காரணமாகவும், குறைந்தபட்சக் கட்டுப்பாடே இருக்கவேண்டும் என்ற அரசினர் கொள்கைக்கு ஏற்பவும், கொள்முதல் திட்டத்தை அனுசரித்து நெல்லையிலுள்ள செங்கோட்டை, குமரியிலுள்ள விளவன்கோடு தாலுகாக்கள் நீங்கலாக, மாநிலம் முழுவதிலும் தாலுகாக்களிடையுள்ள உணவுத் தானியக் கட்டுப்பாடுகளையெல்லாம் எடுத்து விடுவதென்று தீர்மானித்துள்ளோம்.

ஆனல், மாவட்டங்களிடை உள்ள கட்டுப்பாடுகள் நீடிக்கும்; இந்தக் கட்டுப்பாடு கண்டிப்பாக செயல்படுத்தப்படும்; மீறினல் கடுமையான தண்டனை விதிக்கப்படும்.

பொதுநல உணர்ச்சிமிக்க தமிழக விவசாயிகள்மீது நம்பிக்கை வைத்து அரசு சுட்டிக்காட்டியுள்ளதற்கு ஏற்ப அவர்கள் நடந்து கொள்வார்கள் என்றும், கொள்முதலை வெற்றிகரமாக்கத் தொடர்ந்து ஒத்துழைப்பார்கள் என்றும் நம்புகிறேன்.

சமூக விரோதமான கடத்தல் வேலைகளில் ஈடுபடாமலும் அதற்கு ஊக்கமளிக்காமலும் இருப்பார்கள் என்றும் நம்புகிறேன்.''

சட்டபூர்வ ரேஷன் பகுதிகளிலும், குடும்பக் கார்டு முறை உள்ள பகுதிகளிலும் மாதமொன்றுக்கு சாதாரணமாக 48 000 டன் செலவாகி வந்தது 56,000 டன்னுக அதிகரித்துள்ளது; இது, 60,000 டன்வரை போகும் என்று அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

இந்தப் பொறுப்பை நிறைவேற்ற ஆண்டுக்கு 72 இலட்சம் டன் வேண்டியிருக்கும். இதற்கு மேல் ஒரு இலட்சம் டன் கையிருப்பாகவும், சேரளம் போன்றவைகளுக்கு அனுப்பவேண்டிய வகையில் மேலும் ஒரு இலட்சம் டன்னும் சேர்த்து ஆண்டுக்கு மொத்தம் 9 இலட்சம் முதல் 10 இலட்சம் டன் வரை கொள்முதல் செய்ய வேண்டியிருக்கும். இதில் ஏறக்குறைய 5 இலட்சம் டன் ஏற்கனவே கொள்முதலாகியுள்ளது.

கொள்முதல் நீடிக்கும்

கொள்முதல் இப்போதுள்ளது போலவே நீடிக்கும் என்று உணவு வழங்கு துறை வட்டாரங்கள் கூறின.

கல்வி—தொழில் அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

சூன் 7 காலை 9 மணி: திருவாரூர்—திருமண மண்டபம் அடிக்கல் நாட்டல்; 10 மணி: திருவாரூர்—வடிமுனைக் குழாய்த் திட்டம் துவக்கம்; 11 மணி: திருவாரூர்—மாயவரம் – மன்னர்குடி – திருவாரூர் மின்சார நிர்வாகத்தை அரசு மேற்கொள்ளும் விழா; மாலை 4 மணி: ஒவரூர் (முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம்) பாலம் அடிக்கல் நாட்டல்; 5 மணி: உதயமார்த்தாண்டபுரம் — ஊராட்சி அலுவலகம் திறப்பு; 7 மணி: முத்துப்பேட்டை—விருதுபெற்ற ஆசிரியர் பாராட்டு விழா; இரவு 10-30 மணி: காரைக்குடி.

சூன் 8 காலை 9 மணி: மதுரை-பல்கலைக் கழகப் புகுமுகப் பயிற்சித் துவக்கம்; 11-30 மணி: மதுரை—பல்கலைக்கழகக் கல்லூரித் தலைவர்களைச் சந்தித்தல்.

சூன் 9 மாலை 5 மணி: பெரியகுளம்—நகராட்சி வரவேற்பு; 5-30 மணி: வி. எம். உயர்நிலைப் பள்ளிப் புதிய கட்டிடம் திறப்பு; இரவு 7 மணி: பொதுக்கூட்டம்.

சூன் 10 மாலை 4-30 மணி: விருத்தாசலம்—செராமிக் தொழிற்சாலை பார்வையிடல்; மற்றும் செராமிக் பயிற்சிப் பள்ளியின் விடுதிக் கட்டிடம் திறப்பும்.

கா. காளிமுத்து நிகழ்ச்சிகள்

சூன் 6: கீழடி; 7: மேலூர்; 8: சாத்தூர் வட்டம்; 9: ஆவுடையாபுரம்; 14: ரெட்டிப்பட்டி; 15: இராமச்சந்திரபுரம்; 16: தென்காசி; 22: கீரனூர்.

'பிச்சை' ஒழிப்பு

அவசரச் சட்டம் பிறப்பிக்கப்படும்

சண்டிகார், சூன் 6—

பஞ்சாபில் பிச்சை எடுப்பதைத் தடை செய்வதற்கு ஒரு அவசரச் சட்டம் பிறப்பிப்பதென மாநில அரசு முடிவு செய்துள்ளது.

இந்த அவசரச் சட்டத்தின்படி ஒரு பொது இடத்தில் யாராவது பிச்சை எடுத்தால் எந்தப் போலீசு அதிகாரியும் அந்த நபரை வாரண்டு இல்லாமல் கைது செய்யலாம்.

அம்மாதிரி பிச்சையெடுப்பவர்களைத் தனி விடுதிகளில் குறைந்தபட்சம் ஓராண்டு—அதிகபட்சம் மூன்று ஆண்டுக்காலம்வரை வைத்திருக்கும்படி உத்தர விட நீதிமன்றங்கட்கு அதிகாரம் அளிக்கப்படும்.

தமிழகத்தில் நாடாளுமன்றக் கூட்டம் நடைபெறும்

சென்னை, சூன் 6—

தென்னுட்டில் நாடாளுமன்றக் கூட்டத்தை நடத்துவதற்கான வசதிகள் இருக்கின்றனவா என்று ஆராய நியமிக்கப்பட்டுள்ள குழு, ஆங்காங்கு உள்ள இடவசதி சம்பந்தமான தகவல்களை நான்கு தென் மாநிலங்களிடமிருந்தும் கோரியிருக்கிறது.

540 மக்களவை உறுப்பினர்களும் 240 மேலவை உறுப்பினர்களும் அமரக்கூடிய பெரிய மண்டபங்களும், 56 மத்திய அமைச்சர்களுக்கும், இரு அவைகளையும் சேர்ந்த 780 உறுப்பினர்களுக்கும் தங்கும் வசதியும், இதைத் தவிர சுமார் 2,000 அதிகாரிகளுக்கும், பத்திரிகை நிருபர்களுக்கும் தங்குமிடங்களும் அளிக்க வேண்டியிருக்கும்.

தமிழக அரசு இது சம்பந்தமான தகவல்களைச் சேகரித்துவருதாகத் தெரிகிறது.

கழகத் தேர்தல்கள்

சூன் 8, 9-ம் நாட்களில் நடைபெற வேண்டிய நகரக் கிளைகளின் தேர்தல்கள்

1. கீழ்க் குறிப்பிட்டுள்ள நகரங்களில் மட்டுமே சூன் 8, 9 ஆகிய நாட்களில் தேர்தல்கள் நடைபெற வேண்டும்.
2. நகரக் கிளைகளின் தேர்தல்கள், அந்தந்த நகரத்தில் முறைப்படி பதிவு செய்யப்பட்டு, தலைமைக் கழகத்திலிருந்து உறுப்பினர் உரிமைச் சீட்டு பெற்றுள்ள உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டு, முறைப்படி ஒரு பொதுவான இடத்தில் தேர்தல்கள் நடைபெற வேண்டும்.
3. நகரக் கிளைகளின் தேர்தல்கள் அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளரால் அனுப்பிவைக்கப்படும் தேர்தல் ஆணையாளரின் தலைமையில்தாம் நடைபெற வேண்டும்.
4. நகரக் கிளைகளின் அலுவலாளர், மேலமைப்புப் பிரதிநிதி, செயற்குழு உறுப்பினர்கள் ஆகிய எந்தப் பொறுப்புக்கும் போட்டியிடும் உறுப்பினர்கள், கழகச் சட்ட திட்டப்படி குறைந்தது ஐந்தாண்டுக் காலமாவது தொடர்ந்து கழகத்தின் உறுப்பினராக இருக்க வேண்டும்.
5. தேர்தல் கூட்டத்தில் கலந்துகொள்ளவும் வாக்களிக்கவும் போட்டியிடவும் விரும்பும் தோழர்கள், நடைமுறைக் காலத்திற்கான உறுப்பினர் உரிமைச் சீட்டைப் பெற்றவராக இருக்க வேண்டும்.
6. நகரக் கிளைத் தேர்தல்களில்—அவைத் தலைவர் ஒருவர், செயலாளர் ஒருவர், துணைச் செயலாளர் ஒருவர், பொருளாளர் ஒருவர், வட்டக் கழகப் பிரதிநிதி ஒருவர் என்றும், இவர்களைத் தவிர்த்து செயற்குழு உறுப்பினர்களாக 14 பேர்களையும் முறையே முறைப்படி தேர்ந்தெடுக்க வேண்டும்.

செங்கற்பட்டு மாவட்டம்
1. திருவள்ளூர்

வட ஆற்காடு மாவட்டம்
2. அரக்கோணம்
3. ஆற்காடு
4. ஆரணி
5. இராணிப்பேட்டை
6. திருப்பத்தூர்
7. வாலாஜா

தென் ஆற்காடு மாவட்டம்
8. நெல்லிக்குப்பம்
9. பண்ருட்டி
10. திண்டிவனம்

தருமபுரி மாவட்டம்
11. தருமபுரி
12. கிருஷ்ணகிரி

சேலம் மாவட்டம்
13. ஆத்தூர்
14. இடைப்பாடி
15. இராசிபுரம்
16. திருச்செங்கோடு

கோவை மாவட்டம்
17. கோபிசெட்டிப்பாளையம்
18. குன்னூர்

மதுரை மாவட்டம்
19. கம்பம்
20. பழனி
21. பெரியகுளம்
22. தேனி

திருச்சி மாவட்டம்
23. [illegible]றை

தஞ்[illegible]
2[illegible]
2[illegible]

இராமநாத[illegible]
26. தே[illegible]
27. பரமக்கு[illegible]
28. இராமநாதபு[illegible]
29. சிவகாசி
30. சிவகங்கை

'அறிவகம்', சென்னை-13
6—6—68

— தலைமைக் கழகம் (தி.மு.க.)

நெல்லை

மாவட்ட

நகர—பெருநகரக் கிளைத் தேர்தல்கள்

ஒத்தி வைக்கப்படுகின்றன

தென்காசி இடைத் தேர்தலையொட்டி நெல்லை மாவட்டத்தில் 8, 9-ஆகிய நாட்களில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த கீழ்க்காணும் நகர—பெருநகரக் கழகக் கிளைகளில் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுகின்றன.

தேர்தல் நடைபெறவேண்டிய நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

1. மேலப்பாளையம்
2. கோவில்பட்டி
3. புளியங்குடி
4. சங்கரன்கோவில்
5. செங்கோட்டை
6. தென்காசி
7. கடையநல்லூர்
8. பாளையங்கோட்டை

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

துப்பாக்கி வைத்திருக்கத் தடையில்லை!

அமெரிக்காவில் துப்பாக்கி வாங்கி, வைத்திருப்பது எளிது! தபால் மூலம்கூட தருவிக்க முடியும்!

இராபர்ட் கென்னடியைத் தாக்கியவன் பயன்படுத்திய ரிவால்வர், சாதாரண சஞ்சிகைகளிலும்கூட விளம்பரப் படுத்தப்படுகிறது!

குடியரசுத் தலைவர் கென்னடி, டாக்டர் கிங் கொலைகளை அடுத்து, துப்பாக்கி விற்பனை, வைத்திருப்பதைக் கட்டுப்படுத்தச் செய்த முயற்சி, தேசியத் துப்பாக்கிச் சங்கத்தின் பலமான செல்வாக்கு காரணமாக தோற்றுவிட்டது!

வேளாண்மைத் துறை அமைச்சர்

ஏ. கோவிந்தசாமி உடல் நிலை

சென்னை, சூன் 6—

மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்றுவரும் வேளாண்மைத்துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்களின் உடல்நிலை தேறிவருகிறது.

சிகிச்சை அளித்துவரும் மருத்துவர்கள், 'அவருக்கு முழு ஓய்வு தேவை' எனக் கூறியுள்ளனர்.

முருகுபாண்டியன்

கலை நிகழ்ச்சிகள்

சூன் 7: திருப்பூர்; 8: தேவஞ்சேரி; 9: திருப்பனந்தாள்; 11: சுப்பிரமணியபுரம் (திருச்சி); 12: கொளத்தூர்; 13: பனங்[illegible]குடி; 14: நெல்லிக்குப்[illegible] [illegible]திருவிழந்தூர் (மாயூரம்); [illegible]; 17: ஆயர்பாடி; [illegible]; 19: சிதம்பர[illegible] [illegible]ண்காடு; [illegible]

திராவிட முன்னேற்றக் கழக[illegible] திரு. இரா. செழியன் எம்.ஏ., [illegible] அவர்கள் ஆசிரியராகவும், வெ[illegible]பவராகவும், அச்சிடுபவராகவும் கொ[illegible] அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாரா[illegible] செட்டித் தெரு, சென்னை,13) அச்[illegible] வெளியிடப்பெற்றது.